மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 161 /2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ஆஷாராணி (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

03.06.2025

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –**

1. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்றும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன சண்முகநாதன் எனது அப்பா முதல் வாதி எனது அம்மா எனது பெற்றோருக்கு நாங்கள் 3 குழந்தைகள் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு பிரதிவாதி கணேசன் எனக்கு சித்தப்பா முறை என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் மனோஜ்குமார்,உஷாராணி மற்றும் ஆஷாராணியாகிய நான்.

2. இந்த வழக்கில் எனது மூத்த சகோதரியான உஷாராணியை சேர்க்கவில்லை என்றால் அவர்அமெரிக்காவில் இருக்கிறார். எனது அப்பா மூலமாக எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து ஏதேனும் இருந்தால் வாதிகளான எங்களுக்கு உள்ள உரிமை, எனது சகோதரியான உஷாராணிக்கும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உஷாராணி வெளிநாட்டில் உள்ள காரணத்தினால் வழக்கில் சேர்க்காததது சட்டப்படியாக ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடவடிக்கை அவரது இசைவுடன் தான் நடைபெறுகிறது. உஷாராணி என் சார்பாக வழக்கு நடத்தகோரி எழுத்து மூலமாக ஏதேனும் ஆவணங்கள் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

3. வழக்கில் உஷாராணி, மனோஜ்குமார் வெளிநாட்டில் உள்ளதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இருவரும் வெளிநாட்டில் இருப்பதாக சொல்லிஉள்ள நிலையில் மனோஜ்குமாரை மட்டும் வழக்கில் தரப்பினராகசேர்த்துவிட்டு, உஷாராணியை தரப்பினராக சேர்க்காததது ஏதே கெட்ட எண்ணத்தில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அண்ணன் இந்தியாவிற்கு வந்துவிட்டார். நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு பொய்யான நடவடிக்கை

என்பதால்தான் உஷாராணி இவ்வழக்கில் பங்கு பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியும்.

4. வழக்கு சொத்தின் மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். தோராயமாக வழக்கு சொத்து சுமார் 30–40 லட்சத்திற்கு மதிப்பு இருக்கும். வழக்கு சொத்து சுமார் 30–40 லட்சத்திற்கு மதிப்பு இருப்பதால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய பண ஆள்வரைக்கு மிகைப்பட்ட வழக்கு என்றால் நான் சென்னையில் இருப்பதால் எனக்கு இங்குள்ள மார்க்கெட் மதிப்பு தெரியாது. எனது அம்மா, அப்பா எப்போது வரை சேர்ந்து வாழ்ந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எப்போதும் சேர்ந்துதான் வாழ்ந்தார்கள் என்னுடைய தந்தை பெண்கள் விசயத்தில் நடத்தை தவறிவிட்டதால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து மீண்டும் சேர்ந்துள்ளனர்.

5. எனது அப்பா, அம்மா எத்தனை ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் ஆண்டு கணக்கில் பிரியவில்லை அவ்வப்போது பிரிவார்கள் பிறகு சேர்ந்து கொள்வார்கள். தோராயமாக 2000 ம் ஆண்டிற்கு பிறகு எனது தகப்பனார்இறக்கும் வரை எனது பெற்றோர்கள் பிரிந்து தான்வாழ்ந்தார்கள் என்றாலும் அதனை நீதிமன்றத்தில் கூறினால் எங்கள் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் பொய்யாக சேர்ந்து வாழ்ந்தார்கள் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் கடைசி காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருந்தோம் என்பதை காண்பிப்பதற்கு ஆவண ஆதாரங்கள் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல, புகைப்படங்கள் உள்ளது. எனது தகப்பனாருடன் வாதிகளான நாங்கள் சேர்ந்து எடுத்துகொண்ட புகைப்படங்கள் ஏதேனும் இவ்வழக்கில் ஆவண ஆதாரங்களாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. எனது தகப்பனார் 2018 ம் ஆண்டு இறந்தார் அவர் இறக்கும்போது எனக்கு வயது 48 ஆகும். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எனது பெற்றோருக்குள் நடந்த நல்லவை, கெட்டவை அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சென்னையில் ஆதம்பாக்கம் பகுதியில் குடியிருந்தோம். எனது பெற்றோர் பிரிந்து வாழ்ந்த காலத்தில் அம்மா ஆதம்பாக்கத்திலும் அப்பா திருச்சுழியிலும் வாழ்ந்து

வந்தார்கள் என்றாலும் சரிதான். எனது அப்பாவும், அம்மாவும் மாறிமாறி வந்து செல்வார்கள். எனது அம்மா, எனது அப்பா மீது சொத்து தொடர்பான வழக்கு சென்னை ஆலந்தூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும். அந்த சொத்து எனது அப்பா பெயரில் உள்ளது என்றால் அதன் இடத்தினை எனது அம்மா எனது தந்தைக்கு கொடையாக கொடுத்தார். அதில் கட்டப்பட்டுள்ள கட்டுமானம் எனது தந்தையுடையது. மேற்படி வழக்கு விபரங்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சங்கதிகளாக சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக சேர்ந்தே வாழக்கூடிய தம்பதிகள் தங்களை சேர்த்து வைக்ககோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான்.

7. எனது அப்பா, அம்மாவும் பிரிந்து வாழ்ந்த நிலையில் எனது அப்பா அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் எனது அம்மாவை தன்னுடன் சேர்ந்து வாழ அழைத்து H.M.O.P.No.62/2006 என்ற வழக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் எனது அம்மா, எனது அப்பாவுடம் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என எதிருரை தாக்கல் செய்து வழக்கு நடத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன்பின்னர் மேலும் சில வருங்களாக எனது தாயார் எனது அப்பாவுடன் சேர்ந்து வாழாத காரணத்தினால் 2009 ம் ஆண்டு அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் எனது அம்மாவை விவாகரத்து செய்வதற்காக H.M.O.P.No.45/2009 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான், அந்த வழக்கு தொடர்ந்து நடைபெறவில்லை விவாகரத்து ஆகவும் இல்லை, மீண்டும் சேர்ந்து வாழ்ந்தார்கள்.

8. மேற்படி அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட சங்கதிகளை இந்த வழக்கின் சங்கதிகளில் நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் சேர்ந்து வாழ்ந்ததால் இவ்வழக்கில் சொல்லவில்லை. எனது பெற்றோர் வருடகணக்காக பிரிந்து வாழவில்லை என்று நான் சாட்சியம் அளித்த வகையில் தற்போது பிரிந்து வாழ்ந்ததை உறுதிபடுத்தும் வகையிலான மேற்படி அருப்புக்கோட்டை சார்புநீதிமன்ற வழக்கு சங்கதிகளை மறைத்து இந்த வழக்கு நடவடிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டிற்கு பின்னால் எனது பெற்றோர் சேர்ந்து வாழ்ந்ததற்கான ஆவண ஆதாரங்கள் உள்ளதா என்றால் உள்ளது.

9. வாசாஆ 1 ஆனது எனது அப்பா விபத்து ஏற்பட்டு இறந்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் தகவல் அறிக்கையில் இறந்துபோன உமாநாதன் கடந்த 15 ஆண்டுகளாக அவரது மனைவி உமாராணியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு திருச்சுழியில் வாழ்ந்து வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் இறந்தகாலத்தில் எங்களுடன் இல்லை பிரதிவாதிகளுடன் இருந்தார் என்றால் சரிதான்.(சாட்சி தாமாக அவரது தந்தை விருதுநகரில் வேலை பார்த்ததால் அங்கு வீடு எடுத்து இருந்ததாக கூறுகிறார்). எனது தகப்பனார் மேற்படி விருதுநகரில் இருந்ததற்கான முகவரி ஆதாரங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என்னிடம் இல்லை. எனது தகப்பனார் எனது தாயாரை பிரிந்து வாழ்ந்த காலத்தில் இருந்து பிரதிவாதிகளின் முகவரியாக காட்டப்பட்டுள்ள முகவரியில் தான் இருந்து வந்தார் விருதுநகரில் தங்கி இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் தயவில் தான் பிரதிவாதிகள் இருந்தார்கள்.

10. எந்த அடிப்படையில் எனது அப்பா 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய உயில் ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று கோருகிறீர்கள் என்றால் அந்த ஆவணம் மோசடியானது. வழக்கு சொத்துக்கள் எனது அப்பாவிற்கு சுய சம்பாத்ய சொத்துக்கள். ஒருவர் சுய சம்பாத்ய சொத்தை தன்னுடைய ஆயுள் காலத்தில் அவருடைய விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் ஏற்பாடு செய்யலாம் என்ற சட்டநடைமுறை எனக்கு தெரியும்.அந்த அடிப்படையில் எனது அப்பா அவருடைய சுய சம்பாத்ய சொத்தை அவர் உயிரோடு இருந்தபோதே அவருடைய விருப்பப்படி தாமாக 1, 2 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்படுத்திய உயில் ஆவணத்தை மோசடி என்று குறிப்பிட எவ்வித முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல அந்த உயில் மோசடியானது. எனது தந்தை தனது மனைவி மற்றும் மக்களாகிய நாங்கள் சரியாக பராமரிக்காத காரணத்தினால்தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தை முறையாக ஏற்படுத்தியிருந்தால் எங்களிடம் சொல்லி இருப்பார் 2011ம் ஆண்டு ஒரு உயில் பெயரில், விலாசத்தில் பிழையாக எழுதப்பட்டது. எனவே 2017ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உயில் ஆவணம் மோசடியானது ஆகும். 2011ம் ஆண்டு உயிலும் 2017ம் ஆண்டும் உயிலும் இந்த

வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் பெயரில்தான் உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவை எனது தாயாரும் நாங்களும் பராமரிக்காமல் புறக்கணித்துவிட்ட காரணத்தினாலும், அவர் எங்களை பிரிந்து வாழ்ந்த காரணத்தினாலும் மட்டுமே அவருடைய வாழ்வில் நடந்த மேற்படி ஆவண பதிவுகள் விபரத்தை எங்களுக்கு சொல்லாமல் தவிர்த்து உள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பா எங்களோடு இருந்த வரையில் அவர் பெண்கள் பற்றிய நடத்தையில் தவறானவர் என்ற குற்றச்சாட்டு இருந்ததா என்றால் இருந்தது.

11. எனது அப்பா என்னுடன் எதேனும் தவறாக நடந்துள்ளாரா என்றால் இல்லை. எனது அப்பா எனக்கு என்ன உறவுமுறையோ அதே போல் தான் 4ம் பிரதிவாதிக்கு உறவுமுறை என்றால் சரியல்ல. எனது தந்தையின் சகோதரரின் மகள். எனது அப்பாவுடன் நாங்கள் வாழ்ந்த காலத்திலும், எனது அப்பா உயிரோடு இருந்த காலத்திலும் எனது அப்பாவின் நடத்தை பற்றி எதுவும் கூறாமல் தற்போது இவ்வழக்கிற்காக அவரது நடத்தை பற்றி தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை காலிமனையாக வாங்கி எனது அப்பா அதில் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். எனக்கோ, எனது அம்மாவிற்கோ, மற்ற வாதிகளுக்கோ வழக்கு சொத்தில் முகவரி தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் எனது அப்பாவின் EPF ல் எனது தாயார் தான் Nominee அதில் வழக்கு சொத்து முகவரி உள்ளது. வாசாஆ 8 ஆவணம்தான் நான் சொல்லும் மேற்படி ஆவணம் ஆகும். வாசாஆ 8 ல் எனது அம்மாவின் கையொப்பம் இல்லை, எனதுஅப்பா பற்றி குறிப்புகள் தான் உள்ளது அவருடைய முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்த பிரதிவாதிகளை வெளியேற்றி எங்கள் வசம் அனுபவம் ஒப்படைக்க கோரி பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான் சொத்தே எங்கள் சொத்து என்று கேட்டுள்ளோம்.

12. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருவதை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து அவர்களை வெளியேற்றி எங்கள் வசம் அனுபவம் ஒப்படைக்கவேண்டும் என்று பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றாலும் அந்த பரிகாரம் கோராத காரணத்தினால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் உணவகம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அதனை எனது தந்தைதான் வைத்து

கொடுத்தார் என்றால் சரிதான். எனது அப்பா பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தை வாடகைதாரராகவோ, ஒத்திதாரராகவோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஆயுள் காலத்தில் இருந்தே பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் வழக்கு சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது அப்பா 1, 2 பிரதிவாதிகளின் பெயருக்கு இரண்டு முறை உயில் ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்லும் வகையில் மேற்படி 2 உயிலுக்கு இடையே 6 ஆண்டுகள் இடைவெளி என்றால் சரிதான். 2017 ம் ஆண்டு ஆவணம் மோசடியானது. 2017 ம் ஆண்டு ஏற்படுத்திய உயில் பற்றி விபரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது தந்தை இறந்தபிறகு 2 நாட்கள் கழித்து பத்திரிக்கை விளம்பரம் செய்தார்கள் அவ்வாறு மேற்படி விபரம் தெரிய வந்தது. எனது அப்பா உயிரோடு இருந்த காலம் வரைக்கும் பிரதிவாதிகளுக்கு எவ்வித இடையூறும் நாங்கள் செய்யவில்லை என்றால் எங்கள் அப்பாவிற்காக நாங்கள் எந்த வித இடையூறும் செய்யவில்லை. வாசாஆ 14 ஆவணம் தான் மேற்படி பத்திரிக்கை விளம்பரம் ஆகும். மேற்படி பொது அறிவிப்பை மறுத்து நாங்கள் மறு விளம்பரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2011 ம் ஆண்டு உயில் பற்றி எங்களுக்கு எப்போது தெரியும் என்றால் ஆண்டு ஞாபகம் இல்லை. எனது அப்பாவின் இறப்பிற்கு பின் தெரியுமா அல்லது அதற்கு முன்பே தெரியுமா என்றால் இறப்பிற்கு முன்பே தெரியும். 2017 ஆண்டு உயில் மோசடி என்று சொல்லி உள்ளபோது 2011 ம் ஆண்டு உயில் பற்றி உண்மையானது என்று ஒப்புக்கொள்கிறீர்களா என்றால் பின் தொடர்ச்சியாக உயில் ஏற்பட்டதால் முந்தைய உயில் பற்றி ஆட்சேபனை சொல்லவில்லை. (சாட்சி தாமாக முந்திய உயில் சுயநினைவுடன் எழுதியதா என்று எங்களுக்கு தெரியவில்லை என்று கூறுகிறார்.). வழக்கு சங்கதிகள் முழுவதிலும் எனது அப்பாவை அச்சுறுத்தி, உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்லி உள்ள நிலையில் தற்போதுஅதற்கு முரண்பாடாக சுயநினைவில் எழுதப்பட்டதா என்று தெரியவில்லை என்று சொல்லும் வகையில் எனது வழக்கு பொய்யான சங்கதிகளோடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13. 2011 ம் ஆண்டிலோ, 2017 ம் ஆண்டிலோ எனது அப்பா தன்னை அச்சுறுத்தி உயில் ஏற்படுத்தப்படுத்தப்பட்டதாக எனது தகப்பனார் ஒரு போதும் எங்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் பயத்தினால் எங்களிடம் சொல்லவில்லை. உயில் ஆவணம் பதிவு செய்யவேண்டும் என்று கட்டாயம் இல்லை என்ற விபரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்ற இல்லாதபோது உண்மையில் மோசடியாக பெறப்பட்ட உயில் ஆவணம் என்றால் பதிவு செய்யாத உயிலே போதும் ஆனது என்றாலும் எனது தகப்பனார் பத்திர அலுவலகம் சென்று பிரதிவாதிகள் பெயருக்கு பதிவு செய்து கொடுத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே மோசடியாக பதிவு செய்யப்பட்ட உயிலாக இருந்திருந்தால் 6 ஆண்டுகள்கழித்து மீண்டும் அவர்கள் பெயருக்கு பிழைகளை திருத்தம் செய்து உயில் ஆவணம் ஏற்படுத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எங்கள் மீது பாசம் இல்லாத காரணத்தினால் எங்கள் பெயரில் எவ்வித உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலே வாசாஆ 11, வாசாஆ 12 ஆகிய ஆவணங்கள் எனது தகப்பனாரின் சுயநினைவோடு எழுதி கொடுக்கப்பட்ட ஆவணங்கள் எனது என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 11, வாசாஆ 12 ஆவணங்களில் உள்ள சாட்சிகளை விசாரிப்பதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை உள்ளது.

**மறு விசாரணை –**

இல்லை